IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

OS.No. 53/2025

dated : 07.10.2025

P.W.1

Name முருகன்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

என் மாமனார் பெயர் தங்கவேல். பிரதிவாதியை எனக்கு நேரில் தெரியாது என்றால் சரியல்ல. பிரதிவாதியின் தந்தையுடன் நான் பணிபுரியவில்லை என்றால் சரிதான். முருகா இறப்பதற்கு 5 வருடங்களுக்கு முன்பிருந்து என் மாமனார் மூலம் அவரை பழக்கம். முருகா வனத்துறையில் பணிபுரிந்தவர். அவர் இறப்பதற்கு முன்பு தென்காசியில் பணிபுரிந்தார். முருகாவிற்கு மலக்குடல் புற்றுநோய் இருந்தது. அவருக்கு புற்றுநோய் சிகிச்சையில் என்ன விதமான சிகிச்சைக்கு பணம் கேட்டார் என்று தெரியாது ஹீமோதெரபி செய்யப்போவதாக பணம் கேட்டார். மேற்படி விவரங்களை வழக்குரை மற்றும் முதல் விசாரணை வாக்குமூலத்தில் கூறவில்லை என்றால் சரிதான். முருகா மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார் என்று கூறும் விவரம் தவறானது என்றும் அதை பிரதிவாதிகள் மறுக்கிறார்கள் என்றும் சொன்னால் சரியல்ல. மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனையிலிருந்து வேறு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு

செல்லப்போவதாக பிரதிவாதிகள் கூறியதாக நான் கூறுவது பற்றிய விவரங்களை வழக்குரையிலும், முதல் விசாரணையிலும் கூறவில்லை என்றால் சரிதான். எந்த ஆண்டு முதல் அவர் புற்று நோய்க்கான சிகிச்சை பெற்று வந்தார் என்று தெரியாது. கடன் பெறும் மூன்று மாதத்திற்கு முன்புதான் அந்த விவரத்தை சொன்னார். 2009 முதல் 2019 வரை TTSL நிறுவனத்தில் பணிபுரிந்தேன் தற்போது பணிபுரியவில்லை. எனக்கு எந்த வகையில் வருமானம் கிடைத்தது அந்த தொகையை எவ்வாறு கைவசம் வைத்திருந்தேன் என்ற விவரங்களையும் வழக்குரையிலும், முதல் விசாரணையிலும் கூறவில்லை என்றால் சரிதான். என்னிடம் முருகா எங்கு வைத்து எப்போது பணம் பெற்றுக் கொண்டார் என்று வழக்குரையிலும், முதல் விசாரணை வாக்குமூலத்திலும் கூறவில்லை என்றால் சரியல்ல. என் வீட்டில் வைத்து வாங்கியுள்ளார். மேற்படி விவரங்களை வழக்குரையிலும், வழக்கறிஞர் அறிவிப்பிலும் கூறவில்லை என்றால் சரிதான். யார் முன்னிலையில் கடன் வாங்கினார் கடன் உறுதிச் சீட்டை யார் எழுதினார் என்ற விவரங்களை அறிவிப்பிலும், வழக்கிலும் கூறவில்லை என்றால் சரிதான். முருகா உயிருடன் இருந்த காலத்தில் அந்த கடனை திரும்ப கேட்டு நேரில் சென்றதாக வழக்குரையிலும், அறிவிப்பிலும் குறிப்பாக கூறவில்லை என்றால் சரிதான். கடன் பெறும்போது சொத்திற்கான ஆவணங்களை யார் முன்னிலையில் என்னிடம் கொடுத்தார் என்று வழக்குரையிலும், அறிவிப்பிலும் கூறவில்லை என்றால் சரிதான். முருகாவின் சொத்துக்கள் குறித்த ஆவண எண் பற்றிய விவரங்களை வழக்குரையிலும், அறிவிப்பிலும் கூறவில்லை என்றால்

சரியல்ல. சாட்சி வழக்குரையை படித்துப் பார்த்த பின் கூறவில்லை என்று ஒப்புக் கொள்கிறார். 22 லட்சத்தை இரண்டாயிரம் ரூபாய் மற்றும் ஐநூறு ரூபாய் நோட்டுக்கள் எத்தனை எண்ணம் எத்தனை கட்டுக்கள் என்று வழக்குரையிலும், அறிவிப்பிலும் கூறவில்லை என்றால் சரிதான். நான் வருமான வரி செலுத்துபவர் என்றால் சரிதான். நான் முருகா என்பவருக்கு கடன் கொடுத்த விவரம் எனது வருமான வரி கணக்கில் துலங்காது. நான் பணம் கொடுக்கவே இல்லை என்பதால்தான் அந்த விவரம் வருமான வரி கணக்கில் துலங்காது என்றால் சரியல்ல. முருகா என்னிடம் தனக்கு புற்றுநோய் இருப்பதாக 2021 இறுதியில் அல்லது 2022 துவக்கத்தில் என்னிடம் சொன்னார் இந்த விவரத்தை வழக்குரையிலும், அறிவிப்பிலும் கூறவில்லை என்றால் சரிதான். அவர் எந்த மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார் என்று நான் நேரில் பார்க்கவில்லை. நான் கூறுவதுபோல் முருகா என்னிடம் ஒருபோதும் கடன் கேட்டதில்லை என்றும் நானும் கடன் கொடுத்ததில்லை என்றும் சொன்னால் சரியல்ல. வழக்குரை பத்தி 10 ல் வீரகேரளம்புதூரில் உற்பத்தி என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். முருகா என்னிடம் மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதாக கூறி கடன் பெற்றதாக கூறுவது பொய் என்றும் உண்மையில் அவரிடம் நான் பழகியிருந்தால் அவர் மதுரை வேலம்மாள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற விவரத்தை தெரிவித்திருப்பார் என்றும் நான் முருகாவிடம் பேசியதும் பழகியதும் இல்லை என்பதால்தான் அந்த விவரங்களை தவறாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. கடனுறுதிச் சீட்டில் உள்ள கையொப்பம்

முருகாவின் கையொப்பம் அல்ல என்றால் சரியல்ல. கடனுறுதிச் சீட்டில் உள்ள கையொப்பத்தை கையொப்ப நிபுணரின் ஆய்வுக்கு அனுப்ப எனக்கு ஆட்சேபனை ஏதும் இல்லை. 03.03.2022 அன்று எங்கள் ஊரில் வைத்து பணம் கேட்டதாக நான் கூறுவது பொய் என்றால் சரியல்ல. என் வீட்டில் வைத்து பணம் வாங்கியதாக வழக்குரையில் குறிப்பிட்டுக் கூறப்படவில்லை என்றால் சரிதான். எந்தெந்த சாட்சிகள் முன்னிலையில் பணம் பெற்றுக் கொண்டார் என்றும் குறிப்பிட்டுக் கூறவில்லை என்றால் சரிதான். பிரதிவாதியிடம் நேரிலும் தொலைபேசி மூலம் பணம் கேட்டதாக கூறுவது பொய் என்றால் சரியல்ல. முருகா இறப்பிற்கும் துக்க நிகழ்சிக்கும் கூட நான் சென்றதில்லை என்றால் சரியல்ல. அவர் இறந்தது எனக்கு தெரியாது. இரண்டு நாட்கள் கழித்துதான் நேரில் சென்று பார்த்தேன். என் மாமனார் முருகாவுடன் பணிபுரிந்து பழக்கமானவர் என்றால் அவர் இறந்த விவரம் எனக்கு உடனடியாக தெரிவிக்கப்பட்டிருக்கும் என்றும் சொன்னால் சரியல்ல. முருகா இறப்பிற்கு பின்னர் மோசடியாக ஆவணத்தை உற்பத்தி செய்து வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை இல்லை</u>

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.10.07 18:18:17 +0530